குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.17/2020

எ.ம.சா.3

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 22–ம் தேதி புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முரளி | தொழில் | |
| தந்தை பெயர் | பாலகிருஷ்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.25 மணி,

Complainant Murugesan present. Advocate Mr.Balamurali for Complainant. Accused Babyrani absent. Petition u/s.355 of BNSS filed and allowed. Present. Advocate Mr.B.Sivaram present for Accused.

**முதல் விசாரணை :**

1. நான் சேலத்தில் வசித்து சி.சி.டி.வி கேமரா சர்வீஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். அதில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்த பின்பு கையொப்பம் செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எந்த தேதிகளில் எதிரி என்னிடம் அணுகி சம்பவம் நடந்தது பற்றிய பதிவுகளை கேட்டார் என்றால், 15.09.2018 மற்றும் 05.11.2018 ஆகிய தேதிகளில் என்னை அழைத்து சம்பவம் குறித்த வீடியோ பதிவுகளை பதிவிறக்கம் செய்து தருமாறு கேட்டார். பென்டிரைவ் மற்றும் சிடியில் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். மேற்படி பென்டிரைவ் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பென்டிரைவில் உள்ள பதிவுகள் அனைத்தையும் நான் பார்த்து அதன்பின் பதிவிறக்கம் செய்தேன். மேற்படி பென்டிரைவ் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்க தயாராக உள்ளேன்.

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 03.30 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur